**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(01.10.2022 முதல் 05.10.2022 )**

**அறிக்கை எண் 078/2022**

**தேதி.30.09.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 27.9.22 முதல் 29.09.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 79 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம 64 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (27.09.2022 முதல் 29.09.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.10.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27/09 | 28/09 | 29/09 | தேதி | நாள்-1 01/10 | நாள்-2 02/10 | நாள்-3 03/10 | நாள்-4 04/10 | நாள்-5 05/10 |
| 0.1 | 0.0 | 0.8 | மழை (மி.மீ) | 5 | 34 | 8 | 6 | 12 |
| 31 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 30 | 31 | 31 |
| 23 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 20 | 21 | 22 |
| 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 8 |
| 79 | 79 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 66 | 66 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 50 |
| 12 | 17 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 6 | 6 |
| 200 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 290 | 290 | 280 | 290 | 280 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (01.10.2022 முதல் 05.10.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலோசன தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 353°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின்

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயககன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 01-10-2022 | 8 | 5 | 6 | 5 | 4 | 4 | 7 | 7 | 4 | 5 | 4 | 4 |
| 02-10-2022 | 19 | 30 | 31 | 26 | 29 | 30 | 22 | 22 | 30 | 28 | 30 | 28 |
| 03-10-2022 | 16 | 15 | 15 | 12 | 8 | 10 | 15 | 15 | 10 | 14 | 11 | 9 |
| 04-10-2022 | 17 | 9 | 11 | 10 | 7 | 7 | 14 | 14 | 7 | 9 | 7 | 8 |
| 05-10-2022 | 13 | 9 | 10 | 11 | 10 | 10 | 12 | 12 | 9 | 9 | 9 | 11 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழையுடன் காற்றின் வேகம் 6 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் பருத்தி, மஞ்சள், மக்காச்சோளம், தக்காளி, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு தக்க வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>மானாவாரி விதைப்பில் 20 அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்புஅமைத்து அல்லது குறுக்கு உழவு செய்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும். |
| நெல் | விதைப்பு, வளர் மற்றும் பூக்கும் பருவம் | நல்ல மழை எதிர்பார்க்கப்படுவதால் எனவே தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும். அதே போல், கால்வாய் வாசன பகுதிகளில் நீரினை பாதுகாப்பாக வடிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>சம்பா பருவம் முடிவடைந்து விட்டதால் சம்பா நெற்பயிருக்காக நாற்றாங்கால் விதைப்பு மற்றும் நேரடி விதைப்பு செய்யவதை நிறுத்தவும். |
| சோளம், | விதைப்பு | மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்யவுள்ள பயிர்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் |

| | | |
|---|---|---|
| பருத்தி | விதைப்பு | நிலவும் அதிக மண் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக பருத்தி செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல்உ ள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும் |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | வடிகால் வசதி ஏற்படுத்திய பிறகு மஞ்சளுக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சானக்கொல்லியை இடுவதன் மூலம் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி மீ வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | கால்நடைகளில் பால் கறந்த பிறகு மடியை பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு நன்றாக கழுவி விடுவதன் மூலம் மடிவீக்க நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். நனைந்த தீவனத்தை உபயோகப்படுத்துவதை தடுப்பது நல்லது.<br><br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்யவுள்ள பயிர்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் நரிப்பயிர் விதைக்கலாம்.


**முதன்மைஅலுவலர் (GKMS)**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**

**த.நா.வே.ப.கழகம், கோவை**